**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 99/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 மருதை – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 20.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) எனது தகப்பனார் பெயர் ராமசாமி. வாதி பெயர் மருதை என்றால் சரிதான். அவரது தகப்பனார் பெயர் கருப்பண்ணன். 1, 2 வாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு எத்ததை அயிட்ட சொத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 அயிட்ட சொத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 வது அயிட்டம் சர்வே எண் தெரியுமா என்றால் 931/11. மேற்படி சர்வே எண்ணில் 30 செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 936/9. சர்வே எண் 936/8 எனது நிலம். மேற்படி நிலத்திற்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 936/9ல் 1 ஏக்கர் 10 செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை 1, 2 வாதிகள் கிரையமாக வாங்கியுள்ளனர் என்றால் சரிதான்.

2) யாரிடம் இருந்து கிரையம் பெற்றனர் என்றால் பொன்னன், வள்ளியம்மை ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்றனர். பொன்னன், வள்ளியம்மை இருவரும் சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். இருவரின் தகப்பனார் பெயர் சங்கர அம்பலத்தார் என்றால் சரிதான். 1, 2 வாதிகள் சங்கர அம்மலத்தார் மற்றும் அவரது வாரிசுகள் பொன்னன், வள்ளியம்மை மூவரிடம் இருந்து கிரையம் வாங்கினர் என்றால் சரியல்ல, அப்போது சங்கர அம்பலத்தார் உயிருடன் இல்லை. 1, 2 வாதிகள் 27.05.2003ல் கிரையம் வாங்கினர் என்றால் சரிதான். 1, 2 வாதிகள் கூட்டாக கிரையம் பெற்று தற்போதுவரை கூட்டாக

அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரிதான். சங்கர அம்பலத்தார் தாவா சொத்தை பொறுத்து பொன்னன், வள்ளியம்மைக்கு தனித்தனியாக தான செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சரிதான்.

3) மேற்படி செட்டில்மென்ட் ஆவணங்கள் 28.05.1981 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். சங்கரின் அம்பலத்தாருக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் கூட்டுக்குடும்பமாக இருந்து சம்பாதித்திருக்கலாம், அவர் பெயரில் கிரைய பத்திரம் இருக்கலாம், எனக்கு சரியாக தெரியவில்லை. பொன்னன், வள்ளியம்மைக்கு தான செட்டில்மென்ட் ஆவணத்தின் படி தனித்தனியாக பட்டா இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சங்கரன் பெயரில் தனியாக பட்டா இருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்திற்கு தற்போது 1, 2 வாதிகள் பெயரில் தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். வாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

4) சர்வே எண் 936/9 நிலத்திற்கு மேற்குபுறம் உள்ள நிலம் எனது தகப்பனார் ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 936/9 க்கு கிழக்குபுறம் விநாயகர் கோயில் மானிய நிலம் உள்ளது என்றால் சரிதான். தெற்கே கிழமேல் ரோடு, வடக்கில் கிழமேல் வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான். கிழமேல் வண்டிப்பாதைக்கு வடபுறம் உள்ள நிலம்தான் தாவா 1ம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். தாவா 1ம் அயிட்ட சொத்திற்கு கிழபுறம் சாத்தவேளார் நிலம் உள்ளது, வடபுறம் பழனிச்சாமி நிலம், மேற்குபுறம் மகாமுனி வகையறா நிலம் உள்ளது. தாவா 2 ம் அயிட்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான். தாவா 1ம் அயிட்ட சொத்திற்கு நான்குபுறமும் வரப்பு உள்ளது என்றால் சரிதான்.

5) இவ்வழக்கிற்கு முன்பு சங்கரன் வகையறா ஒரு வழக்கும், நாங்கள் ஒரு வழக்கையும் 1983ல் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி இருவழக்குகளும் கீழமை நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது

என்றால் சரிதான். குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு எண் 25/1995 சங்கரன் வகைறயாவுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் தாவா சொத்துக்களை சங்கன் அம்பலத்தார் சுவாதீனத்தில் இருப்பதாக முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 2ம் மேல்முறையீடு முடிந்துவிட்டதா என்றால் இல்லை, நிலுவையில் உள்ளது.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**